

# "வரி" "விளக்கம்" !!! "1-3-2008"

இதழ் II



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# "வரி"

# "விளக்கம்" !!!

"1-3-2008"

இதழ் II

# பொருளடக்கம்


1. வரி விளக்கம் இதழ் - 11 ---------------------------------------- 62

2. அழுகணி சித்தர் பாடல் ------------------------------------------ 109

3. அகஸ்தியர் தந்த விளக்கம் --------------------------------------- 115


எல்லாம் நீ!



ஸத்தியம் பேசு.

(ஸத்தியவாக்கை) (1)

தர்மம் செய்.

# ஓம்

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"

"ஸ்ரீநாமத் குரு திருவடி தன்னை"

"நம்பினோர் கெடுவதில்லை"

"தெய்வம் மனுஷ்யரூபம்"

"யத்பாவம் தத் பவதி"

ஸ்ரீராம் ஜெயராம், ஜெயஜெயராம் ஓம்

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்,"

"அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமம், ஜீவர்களும்,"

"சிறிதும் இல்லை!"

அடங்கு! அடங்கு! அடங்கு! அடக்காதே! அடக்காதே! அடக்காதே!



(95)

# சுத்த ஸித்தாகாயம் :- இதன் பொருள்,

இரண்டு வகைப் படும் :- ஞான ; பெரு வெளி!
,, ,, :- ,, பெரு ஒளி!!
இவ் விருநிலைப்பட்ட, அவ் ஒன்றுக்குள் நாமரூப
பிரபஞ்சம், பிரமாணமாக இல்லை! ஆனால் அப்பிரபஞ்சம்
ஞானப் பெருவெளி (ஒளி)க்கு, அன்னியமாய் இல்லை;
என்பதும் ஸத்தியமே!
பிரபஞ்சம் இல்லாத நிலையில், அது உண்டு!
அது இல்லாமல் பிரபஞ்சம் இல்லை!
மண்ணில் பாண்டம் இல்லை! மண்ணில்லாமல் பாண்டம் இல்லை என்பது போன்று!
இந்த த்வைத பிரபஞ்சமானது, இறையனாவும்
இல்லென்றோர் கிடக்கும் அது, இரண்டு வகைபடுகிறது.
ஒரு நிலையில் :- அணு அளவேனும் இல்லை என்றும்;
மற்றோர் நிலையில் :- ஸ்ரீ பகவான் நிலையும் இல்லை என்றும்
பொருள்படுகிறது என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.
இது எப்படி, விளையாடுகிறது என்றால்?



உ

௬௩


இறையாவும் இல்லை! ஆனாலும் நான். விகார நிலையில்,
இருக்கிறது என்ற, பிரச்சனையால் இது தோற்றப்படுகிறது.
அதாவது வாக்கின் நிமித்தம், உண்டேயன்றி,
ஸத்தியத்தின் நிமித்தம் இல்லை.
வாக்கின் நிமித்தமும், எப்படி உண்டு என்றால்?
ஸித் பரமே! சித்தமாக வடிவெடுத்து;
தனக்குத்தானே, உண்மையெண்ணிக் கொண்டு நம்
அம்ப மனதாய்! உண்டென சாதிக்கிறது.
சித்தத்தில், நாமரூப பிரபஞ்சம், தோற்றப்படுகிறது.
மாயாமனதினால் பிரபஞ்சம் விசகரிக்கப்படுகிறது!
ஆகவே இந்த, மாயா மனதை, வாக்கில் ஒடுக்கி, மௌனமாக்கி
விட்டால், நாமரூபம் மங்கி விடும். நாமரூபம் போனால்
சித்தத்துக்கு, வெளியால் வராமல், ஸித் சொரூபமே மிஞ்சும்,
ஸித் சொரூபமே ஸத்தாகும். ஸத்தே பிரம்மமாகும். அப்
பிரம்மமே நாம்! நாமே பிரம்மம்! என்ற நிலையில்,
இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என்ற ஆனந்த,
நிலையால், அம்மாவே அகமாக, இருப்பாயாக!



உ


96

சுழுப்தி என்னும், உறக்கத்தில் மனம்! ஆன்மாவோடு இணைந்த தன்மையினால் (ஆனந்த மயமாக விளங்கி) அங்கு இருமை இல்லாமல் **ஒருமையாக** இருக்கும் தன்மையால். மனம் இணைந்த நிலையில், ஆன்மா ஒன்றே உண்டு. ஆன்மாவும்! மனமும்! இணைவதால் **கனவில்** தோன்றும் **நாமரூப, ஜகம், போல்!** ஒரு வடிவாயுள்ள, பரசொரூபமாகிய **பரத்துடன்! மாயா** இணைவதால், **சீவ ஜக ஜீவ பர** (ஈஸ்வரர்கள்) வடிவம், இயல்பாக (சஞ்சல வியவகார நிலையில்) தோன்றும். இப்படி தோன்றுவதை, மனம் வசப்பட்டோர், அம்மனதை தம் வசம், ஆக்காத தன்மையினால், மனமய **குற்ற பேத** உணர்வாக, கண்டு, குணதோஷங்களுக்கு, ஆட்படுவதால், புண்ணிய பாப வினையும்; அவ்வினையால், ஜனன மரணமும் உண்டாகிறது. இங்கு மனதை, விகாரம் அடையவிடாமல், இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என ஓர்மித்து, அது வேறாம்! நானே அது! என சுகமாக, சும்மா இருந்தால், பிரம்மானந்த மயமாகலாம்!



97 அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமே எல்லாம்! என்ற
பராபாவனையால்; மாயாவின் தோற்ற, மோக மயக்கம்
நசிக்கும்! மனமுடிச்சு அவிழ்க்கப்படும்! சஞ்சிதமும்,
ஆகாமியமும், கெட்டு அழியும்! பிராரப்தம், தோன்றுது
அனுபவித்து, முடிவுறும்! விபரீத சந்தேக கலக்கம்,
அடியோடு நாசம் ஆகும்!


98 எல்லாம் பிரம்மமயம் என, போதித்தாலும்;
வேத சாஸ்திர, வேதாந்தம், முறையோடு கற்றாலும்;
பழக்க வழக்க வாசனையினால், அருமை தான் தோற்றும்!
காரணம் ஸ்ரீ பகவானின் கருணை பெருமையாகும்!
அதாவது கண்ட சொரூப, பரசிவம் கருணையும் வேண்டும்!
அகண்ட சொரூப பரசிவம், " "
முந்தையது வினை அழியும்! பிந்தையது மனம் மறுத்தாலும்!!
இவ்வாறின்றேல், நிறைவு பெற்றால், நீ அது ஆகவே
இருப்பாய். இதன் சாதனை:-
பணணணணணணணணணணணணணணணணணணணிவே யாகு!
பொறுமையே கவசம். விட்டுக் கொடுத்தால் விக்கினம்
நம்பிக்கையும்! வைராக்கியமும் இரு கண்கள்! மாறாயும்!
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என அம்மா இரு.



99

அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்,
என்ற, பிரம்மான்ம பாவனையானது, உறுதி
நிச்சயம் ஆகிவிட்டால்; தேகம் நாம் என்றும்,
நாமரூப, உலகம் எனது என்றும், இதுகால
பரியந்தம், பாவனை செய்த, மனமடமையை
நாசம் செய்து; தூங்குபவன் கைமலர், எப்படி அவன்
கையைவிட்டு, எப்படி நழுவிவிடுமோ? அப்படி உன்
உணர்விலிருந்த, நாமரூப ஜகம், நழுவிமறைந்து விடும்.


100 வானம் முதல், பஞ்ச பூதங்களும், அதன் காரியங்களும், (ஈஸ்வராதிகளும்) அறியாமையின் ஜீவனும்,
இசைச் சொல்லும் யாழும்! இவைகளையறிவோரு,
கேட்கும் நீயும்! மற்றும் எல்லாமும், எந்த
நாமரூபத்துடனும் இல்லவே இல்லை.
மண்ணில் பாண்டம் இல்லை! மண்ணில்லாமல் பாண்டம் இல்லை!
என்பது போல்
அது இல்லாமல், இவைகள் இல்லை என்றும்,
இவைகள் நாமரூபமாக, இல்லாத நிலையில், அது
உண்டு என்று, உன் உணர்வுபூர்வமாக உணர்ந்து/



விட்டால்; இதுவரை உண்டு! உண்டு!! உண்டு!!!
என நம்பியிருந்த, நாமரூப ஜகமானது; பழுத்த
பழமானது, மரத்தை விட்டு, எப்படி **நாமே**
நழுவி விடுமோ? அதேநியதியில், உன் மனமடமையின்,
மயக்கத்தை விட்டு, இந்த நாமரூப ஜகமானது;
**நாமே** நழுவி விடும்!


(101) காம்ய கர்மாவோ? நிஷ்காம்ய கர்மாவோ?
காம்ய பக்தியோ? நிஷ்காம்ய பக்தியோ?
மூர்த்திகளின் ஆராதனைகளோ? யந்தர யஜ்யாகங்களோ?
தான! தர்ம! புண்ணிய காரிய சேவைகளோ? இவை
அனைத்தும் **மனோ** மயக்கமேயன்றி, உண்மையல்ல!
இவை அனைத்தும், அதனிடத்தில் (பாத்திரத்தில்) தோன்றியதே!
ஆனால் அதனிடத்தில், (பாத்திரத்தில்) இவை அனைத்தும், எந்த
**நாமரூபத்துடனும்** இல்லவே இல்லை.
எல்லாம் ஒன்றே! என்ற நியதியில், இருப்பது ஒன்றே!
நடப்பது நவமே! எனமனமே அசைவற்று,
சும்மாவே, சுகமாக இருப்பாயாக.

68



102 குற்றம் குறை இல்லாத! உபாதை ஏதுமில்லாத!
பிரம்மம் ஒன்றே ஸத்தியம்! பிரிவினை மறுத்தும்,
எந்த வாக்கும், அங்கு பொருந்தாது! விரிந்து பரந்து
காணும், இந்த தோற்றம் அனைத்தும், அந்த ஒன்றுக்கு,
அன்னியமாயில்லை என்ற திட உணர்வான,
நிச்சயத்தால், சஞ்சலம் இல்லாமல், அசைவற நில்.


103 வேத சாஸ்திர, உபநிஷத வேதாந்த,
கருத்துக்கள் எல்லாமே, அந்த ஒன்றே
ஸத்தியம் என, முழங்குவதையும், ஆத்ம ஞானம் என்ற,
இந்த பிரம்ம ஞானத்தை, உணர்ந்த ஸ்ரீ மஹாத்மாக்களும்,
அந்த ஒன்றே ஸத்தியம் என, முழங்குவதையும்,
மன அருள் அகல, எம் ஸத்குருவும்!
எமக்கு, இவ்விதமே அனுபவமாக, உணர்த்தியதாலும்,
இதை அப்படியே ஏற்பாயாக! அந்த ஒன்றை நாமம்
என நினைத்து, நிர்பயமாக உன் உணர்வால்,
இருப்பது ஒன்றே! நடப்பது நலம் என, நினைத்திரு





104 மண்ணில் பாண்டம் இல்லை! மண்ணில்லாமல் பாண்டம் இல்லை!
என்ற நிலையில்; அந்த ஒன்றில் எல்லாம்
உண்டு! எல்லாம், எந்த நாமரூபத்துடனும்;
அந்த ஒன்றிலிருந்து! எனும் பராவஸ்தை உணர்வால்,
தெளிக! சந்தேகம் நாசமாகுக! இதை உன்
க்ஷேமத்திற்காகவே, சொன்னேன்! இது நாமம்! ரூபம்!
குணம்! குறி! மனம்! வாக்கு! காயம்! காலம்! தேசம்!
வர்த்தமானம்! என்ற இந்த, பந்தத்தையும் கடந்த
நிலையில், பரிபூரணமாக இருக்கும்! எம் ஸத்
குரு மேல்; ஆணையிட்டு சொல்கிறேன்!

105 நாமே அது! அதுவே நாம்!
என உன்னில், நீ நிலைத்து நிற்காமல்,
முடியுமா? முடியாதா? ஆகுவோமா? ஆகமாட்டோமா?
நம்மாலிது எப்படி முடியும்? அந்த அளவுக்கு நாம்
புண்ணியம், தேடி இருக்கிறோமா? என இன்னமும்
நிலைகளில், சந்தேகம், கொண்டு; தவிக்காதே.



கடல் அலை போல், சலிப்பதுவே
பந்தம் ஆகும், இதை உணர்!

உன்னிடம், உன்னையன்றி, உன்னை அசைப்பவர்
உனக்கு, அன்னியமாய் எவரும் இல்லை! எதுவுமில்லை!
உன்னால், தோன்றிய, உன் மனமே, உன்னை
அசைக்கிறது! ஆகவே இங்கு, உன்னை (மனதை) அசைவற
நிறுத்தினால், அதுவே அறிவாகும்
கொள்ளுவதும்! தள்ளுவதும்! உன் மனமே!
நாம ரூப, ஜகத் மயக்கம் இருந்தால், அது மனமாகும்!
எல்லாம் நாமே என்று உணர்ந்திருந்தால் அது அறிவு ஆகும்
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என
அசைவற்று இருப்பாயாக!



உ

(71)

(106)

இதன் சாதகனே!

தான் தானும் தனிப்பற்று உனக்கு, அன்னியமாய், தோன்றியும் அனைத்து நாமரூப தோற்றங்களும்! உன் எண்ணத்தின் விளைவேயன்றி, வேறொன்றுமே, தனியே இல்லையென, உணர்வாயாக!


போக்கு வரவிலும்! கொடுக்கல் வாங்கலிலும்!

நான்! எனது எனமயங்காதே!

யாம், இதுவரை சொன்ன நிலையில், எல்லாம் ஒன்றே! அது சிவமே! அதுநானே! என்ற நிச்சயம் பெறுவதே உன் சாதனையாகும்! இதைப் பற்ற அந்த ஒன்றே ஆவாய்! இது சத்தியம்!

அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமே எல்லாம்! இதுவே பரபாவனையாகும்

(72)



(107)

முன் கூறிய, நிச்சயமான அசைவற்ற நிச்சயமே, அகண்டானந்தம்! ஆகும். இந்த நிச்சயத்தை, தடையில்லாமல்! இடைசெய்யாமல்! சோர்வில்லாமல்! அயர்வில்லாமல்! சந்தேக கலக்க மயக்கமில்லாமல்! செய்யும் போது, ஆரம்பம் சற்று கடினமாகவே தோன்றும். உன் இடையறாத, பழக்க வழக்கத்தினால், பயிற்சியும்! முயற்சியும்! உனக்கு தோன்றுமே, அதுவாகிய அவன்! ஏற்றுக்கொள்வான். இதை எப்படி பெற்றேன் என்று, மன அசைவும் அடங்கி ருப்பதிலே.

(73)



# இ

காரணம்:- அன்று மனம் மனமாக இருந்து, அன்று மனம், **அறிவாக** மாறி விடும் அந்த நிலையில், அன்று? அதுவே மனம் மறந்தான நிலையாகும்.

(A) உன் ஜீவித காலம் தோற்றது!
(B) உன் வினையின், எந்த சம்பவங்களும் தோற்றது!
(C) உன் பயிற்சியின், கருமம் சாதனைகள் தோற்றது!
(D) உன் சமகாலத்தவர்களின், நாம ரூபம் தோற்றது!
(E) உன் வினையின், கருமை கொடுமைகள் தோற்றது!
(F) உன் பொறுமையின், பெருமைகள் தோற்றது!
(G) உன் விதி, வழி, மனம், இவற்றின், இயக்கம் தோற்றது!
(H) உன்னை, பயமுறுத்திய நாம ரூபங்கள் ஜீவர்கள், எவையுமே **உன் முன் வாரா** தொழியும்!

அன்று நீ, காலம் கடந்த தன்மையை, எந்த **வினையும்** (அன்றும், இன்றும், என்றென்றும்) **அறிவாகவே** இருக்கிறோம்! என்ற பரப்பிரம்மானந்த பரதைவே இருப்பாய்!



உ

அங்கு நாம! ரூப! குணம்! குறி! மனம்! வாக்கு! காயம்! காலம்! தேசம்! வர்த்தமானம் என்ற, வியாபாரம்! என்ற **பந்தம்** கடந்தவனை நீ ஆகிவிடுவதால், உப்பு பதுமை என்ற, நாமரூபம் மறைந்து, பிரம்மானந்த சமுத்திரமாகவே,

**அகண்டாகாரஸ்வரூபமாகவே** நீ இருப்பாய்! அந்த நிலையில், உன் தாவமானது, பிராம்தாதினம் கடந்த தன்மையினால், **பரகுணி**யாக விதேக முக்தி பெறும்வரை சஞ்சாரம் செய்ய வேண்டிய, நியதி வந்தாலும் உணவு! உடை! இருப்பிடம்! ஆகிய மூன்றும், தேவ தெய்வங்களாகிய, அஷ்டதிக்கு பாலகர்களால்!




உ

(75)

எந்த பிரயத்தனமும் இன்றி, உன்னை அதுவே தேடி வந்து அடையும்! அது சமயம், நீ அறிவு சொரூபமாகவும்! பேரறிவு சொரூபமாகவும் மாறி மாறி நீங்கண்டு அதன் நிலையில், இயங்கும் பருவகால், உன் வாக்கே, **பரஒளியாகவே** விளங்கும்பரும்.

இந்நிலை அணு அணுவாக! அணு அணுவாக! உனக்கு, இயல்பாகவே கூடி வரும். அங்கு **ஆனந்தம்!** ஒன்றுதான், இருக்குமே தவிர, வேறு எதுவும் தோன்றாது! இருக்க முடியாது! இருக்க இயலாது! அந்நிலை பெற உனக்கு இப்போதே, ஆசி வழங்கி விடுகிறேன். இத்துடன், உபதேசங்களை, நிறைவு செய்கிறேன். இனி **நீதான் அனுபவம்!!!**



109 ஹே ஸத்குருநாதா! தாங்கள் அருட் பெரும் கருணையால், புத்திசாலியாகவும் அறிவையும் அலைந்து திரிந்த யாம்! புத்தி நாசமாகி! அறிவு பிரகாசித்த தன்மையினால் எம் சிறுமைத்தனம் நீங்கிவிட்டது.

சிறுமைத்தனம்:- நாமரூப ஜீவ மயக்கமும் & அதன் பேராசை! மோகம்! காமம்! வேதத்தின் விளையாட்டுமாகும். ஜாதி! மதம்! இனம்! மொழி! நாடு! தேசம்! ஆகிய எந்த பின்னங்களும் முழுமையாக ஒழிந்து நாசமாயின. எம் பிறவிப் பயனையும், பெற்று விட்டோம். இனி பெற வேண்டியது ஒன்றுமில்லை. யாம் வந்த வேலையை, எந்த குறையுமின்றி முடித்துவிட்டோம்.

110 உம் கருணையின் உபகாரத்திற்கு, கைமாறு செய்ய எம்மிடமும்! இவ்வுலகிடமும்! ஒன்றும் இல்லை! இந்நிலைக்கு, ஆரோக்கிய, உம்மை வணங்கத்தான் முடியும். வேறொன்றும் செய்வதற்கு இல்லை. அப்படி வணங்குதலும், அதுவும் உபசாரம்தான்!




# இ

அதுவும் உண்மைக்கு, பொருந்தாது தான். தாரணை
பரமார்த்திகத்தில், வணக்கம் செய்பவரும், வணக்கம்
பெறுபவரும் இல்லை. இது **பேதாபேதம்!**
அந்த நிலையாகும்.

111 ஸ்ரீ குருதேவா! உம் கருணையினால், யாம் அடைந்த,
இந்த அதீத நிலையில், சொல்லும் **நீயும்** இல்லை!
கேட்கும் **யாமும்** இல்லை. நாமரூப, ஜக ஜீவ,
தோற்றம் எதுவுமே, எமக்கு அயலாகத் தெரியவில்லை.
சொந்த பந்த பாச, **ஜீவன்** எதுவும் இல்லை!
இவைகளின், கர்த்தாவாகிய **ஈசனும்** இல்லை!
ஜக ஜீவ தோற்றம் அனைத்தும், அகண்டாகார, பரப்
பிரம்மமாகவே, உணர்கிறோம். அதுவும், எமக்கு
அயலாகக் காணோம். யாமே அதுவாகவும், அதுவே
யாமாகவும்! யாமே **எல்லாமாகவும்**
எல்லாமே **யாமாகவும்** உள்ளோம்.

78



112


ஸத் குருவார்யா! உமது பரம கிருபையினால்,

**அகண்ட** ஞானத்தின், **சத்குரு** வான!

அஞ்ஞானம் என்னும், எம் கவனக்குறைவு! என்ற

திரை, முழுமையாக நீங்கி விட்டது.


கவனக்குறைவு :- நாமரூப, ஜக ஜீவ, தேஹங்களை
உண்மை என, நம்பிய நிலை. அதாவது, நாமரூப, ஆவரணங்
களை, அவை பொய்தான்! என உணரா நிலை. அதாவது,
அம்மெய்ம்மண்ணுக்கு, அன்னியமாயில்லை என்று,
உணரா நிலை! அதாவது, அம்மண்ணே (பரமே)
நாம்! நாமே அம்மண்! (அப்பரம்) என, உணரா நிலை.
இக்கவனக்குறைவு, நீங்கிய தன்மையினால், அதாவது,
**நாமரூப!** ஆவரணமயக்கம் நீங்கியதால்,
அவைகளை காணும் நிலையோ! அவைகளை தேடும்
நிலையோ! அவைகளை அடையும் நிலையோ!
உள்ள **கர்மா!** முடிந்துவிட்டது. ஆகவே,
கர்மாவில், சிரத்தை இல்லை. நடைபெற வேண்டிய,
கர்மாவை, மாயாவும், மாயாமனமும், இயல்பாக



எம் முயற்சியும் இல்லாமல், நடந்துகின்றன போலும்?
அதையாம் அறியோம். அங்கு அறியும் மனமில்லை.
ஆகவே, எமக்கு அன்னியம், எவையும் இல்லாத
தன்மையால், **துவைத** பயம் இல்லை. ஆகவே,
யாம் அதுவாகவே இருக்கிறோம்.

113 குருதேவா! உன் கருணையால், நாமரூப ஜகஜீவ,
தோற்றம், வந்ததும், இருந்ததும், மறைந்ததும்,
தோன்றுமல் **கனாநேரத்தில்** குன்ற
உணர்வு! பேதமற்ற! எல்லாம் முழுமையாக கெட்டழிந்து,
எல்லாம் பிரம்மமாகவும்! அப்பிரம்மம் யாமாகவும்!
காணவில்லை! உணர்கிறோம். இம்மெய்யான, உணர்வினால்,
காலத்திற்கு உட்படாத, பிணைக்கப்பட்ட துக்கங்கள்
எல்லாம், நசித்து பிரம்மானந்தமாகவே இருக்கிறோம்.

114 சென்ற விநாடி வரை, எம் கவனக்குறைவால், கெட்டு போனோம்!
இந்த விநாடி, உம் கருணையால், அப்யாஸம் பெற்றோம்!
சென்ற விநாடி வரை, மாயாமலத்தால் மயங்கி இருந்தோம்!
இந்த விநாடி, உம் கருணையால், முக்தனாகி விட்டோம்!
சென்ற விநாடி வரை தள்ளிக் கலக்கத்தால், பயந்து இருந்தோம்!
இந்த விநாடி, கலக்கமற்று, ஆனந்தமாயிருக்கிறோம்!



(80)

சென்ற நொடி வரை, மனம் வசப்பட்ட ஜீவனாக இருந்தோம்!
இந்த நொடி, உம் கருணையால் **சிவம்** ஆம் என ஆனோம்!

(115) சென்ற நொடி வரை அறிவில்லாமல் பக்தி சாலியாக இருந்தோம்.
இந்த நொடியே, **அறிவாளி** யாக இருக்கிறோம்!

சென்ற நொடி வரை, தேகமே யாம் என மயங்கி இருந்தோம்!
இந்த நொடியே அனைத்தையும் உணர்பவனாக, இருக்கிறோம்!
சென்ற நொடி வரை, மனம்! புத்தி! சித்தம்! என மயங்கி இருந்தோம்,
இந்த நொடியே, **ஸத்** பரசொரூபமாகவே இருக்கிறோம்!
சென்ற நொடி வரை, ஜீவாத்மாவாக, நம்பி இருந்தோம்!
இந்த நொடியே பரமாத்மா நானே என ஆனோம்!


(116) ஹே பிரபோ! உன் கருணையினால், எம் மனதின்
**இரண்டு** பட்ட எண்ணங்கள் நாசமாகி,
**ஒருமை** ஆகிவிட்டன. சுவர்க்க நரக பயம் என்ற,
பவ **பாசங்கள்!** ஒரு நொடியில், நீங்கி விட்டன.
நாம ரூப, ஜாதி, ஜீவ பாவங்கள் (எச்சங்கள்) நீங்கி விட்டன.
எல்லாமே, பரமாகிய மண்ணே என்றும், மண்ணாகிய பரமே என்றும்
அதுவே நாம்! நாமே அது! என்ற பிரம்மானந்தம் நிலைத்து விட்டது.



ஸித்பரம் ஓர் விளையாட்
டின் நிமித்தம் சித்தம்
என ஆனது. சித்தம் நாம
ரூபத்தை உண்டு பண்ணி
முனைக்கின்ற வைத்து விளை
யாடியது. விளையாட்டு
போதும் என நிறைவு கொண்ட
போது மௌன சொரூபமான
சித்தம் திரும்பவும் தன் யதார்த்த சொரூபமான
நித்யஸித்பரம் எனத்த ஸம்மேசகமா இருக்
கிறது.


(117) எல்லாமாய் உள்ள, அனைத்து நாம ரூபங்களும்,
எண்ணிக்கையின்றி, அன்னியமாயில்லை. அசித்தமே,
**ஸித்பரம்** ஆன தன்மையினால், எல்லாம் பிரம்மமாகின்று
எல்லாமே பிரம்மமென்றும், அது நானென்ற, அகண்ட
பரநிச்சயத்தால், எல்லாம் என்றும், நான் என்றும்
காணும் இப் **பேதம்** நீங்கியது. ஆகவே, என்
வாக்கால், விளக்க வொண்ணா அகண்ட பரநிஷ்டை
யினால், குண தோஷம், அனைத்தும் தன்னில், ஒன்றும் குறை
இல்லாத, பரப்பிரம்மம் நானே என ஆனேன்.

(118) **தூல** சரீரத்தையும் காணேன்! மனதின்
**சூக்ஷம** சரீரத்தையும் காணேன்! ஆன்மாவும் மனமும்
**மூல** சரீரத்தையும் காணேன்! மோகத்தை
இழைந்த
உண்டு பண்ணும், எந்த நாமரூப, வஸ்துவையும் காணேன்!
கால தேச வர்த்தமானம், வைகரியும் காணேன்!
மனமைய, கர்மகிரியையும் காணேன்! எல்லாமே ஒன்
றான! அதுவே யான்! யானே அது! என்ற, பரமானந்த
மயமாக இருக்கிறேன்.



119 இருப்பது **ஸ்வாமே!** பிரம்மமாக இருக்கிற தேயன்றி! எந்த நாமரூபங்களையும் காணோம்! ஒன்றுவது பிரம்மத்துக்கு, அன்னியமாய் இல்லை. ஸ்வாமே பிரம்மமென்றும்! அது நாமம்! நாமமே அது! என்றும் பிரம்மமான நித்ய அகாநுபவத்தை, உண்மையாய் பெற்றேன்!

120 ஹே ஸத்குருநாதா! உம்முடைய, உபதேசத்தால் **நாமரூப!** ஆவரண மயக்கமும். அம்மயக்கத் தால் தோன்றும் **விட்சேப** கலக்கமும்! விட்சேப கலக்கம்: நான்! எனது! என்ற அஹங்கார மமகாரங்களாகிய வினையும், சொந்த, பந்த பாச, விளைவான் **கலக்கபயம்!** அடியோடு நாசமாகி வாக்கால் விளக்க முடியாத, இயல்பான சகஜானந்தமாய்! வெளியதனில், வெளியதான, அகண்டப் பேரொளியாய்! **ஞான வெளி ஒளியாய்!** அதுவே நாமம் நாமமே அது! என்று ஸ்வயமாய் பிரகாசிக்கிறேன்!



121 ஹே பாபோ! உம்முடைய, ஆழ்ந்த உபதேச கருத்தினால், குற்றம் குறை! பேதா பேதம்! நீங்கி, சகஜ சமாதி நிலை பெற்றவனாய்; பரிபூரண போதம் பெற்றவனாய்; **பிரம்மத்தை** உணர்ந்து, சுத்தப் **பிராமணன்** என, ஆகி விட்டோம்.

122 வேற்றுமை என்ற, பின்மை இல்லாமல், நீ உரைத்த **பிரக்ஞானம் பிரம்மம்** என்ற, மகாவாக்கியம்படி, தெய்வ பிரக்ஞையோடு இரு! ஆத்மப் பிரக்ஞையோடு இரு! பரமாத்மப் பிரக்ஞையோடு இரு! பரப்பிரம்மப் பிரக்ஞையோடு இரு! என்றும்! நாமே **உடல், உலக** பிரக்ஞையோடு **இராதே!** என்பதை, அனுபவித்து, ஸ்வய அனுபவமாய், அகண்டார்த்த வடிவே யாமாகி, மகிழும் ஜீவன் முக்தன் ஆகி விட்டோம்.



(84)

உடைமையை! எனது
எனவும், உடலையே
நான் எனவும், சொந்த
பந்த உரிமை கொண்
டாடுவது தேகாத்மபுத்தி
ஆகும். அந்த ஒன்றே நாமு
நாமே அது! என உணர்வால்
உணர்வது பிரம்மான்ம பாவனை! எல்லாம் ஒன்றே
அதுவே நாம்! எனஉணர்வது அகண்டான்ம பாவனை!

(123)

ஹே பிரபோ! உம்முடைய உபதேசத்தை, சிரத்தையுடன்,
சிரவண! மனன! நிதித்தியாசம்! செய்த தன்மையால்
தேகம் நாம்! என்ற **தேகாத்ம புத்தி!**
அழிந்து நாசமானதும். அஹம் பிரம்மமே, நாம் என்ற,
**பிரம்மான்ம அறிவு** பிரகாசித்தது.
மேலும், எம்முடைய தடையற்ற, அப்யாசத்தினால்,
அந்த பிரம்மான்ம அறிவும், மறைந்துவிட்டது!
அதுவே **அகண்டான்ம** பாவனையான,
**பேரறிவு** பிரகாசித்து விட்டது.

பிரம்மான்ம பாவனை { அளவுக்கு உட்பட்டது
அகண்டான்ம பாவனை { அளவிடற்கரியது.

இந்திரியயில், அதிசயம் எதுவும் இல்லாத, ஜீவகர்த்ருத்வம்
ஈசகர்த்ருத்வம், இயல்பாக மறைந்து விட்ட தன்மையினால்
யாம் **ஜீவன் முக்தனாகவே** இருக்கிறேன்.



(85) ஸத்குருவுக்குத் தகும் அர்ப்பணமானது:- உடல்! உடைமை! உயிர்! மானவமானம், சூடு, சுரணை லஜ்ஜை, வெட்கம் இவைகளை தொலைக்கும் போது நாமரூப வினை சம்பந்தம் முதலில் நாசம் அடைகிறது. பின் சரணார்ப்பணத்தால் மனம் மங்கலம் அடையும்.


124 குறையும்! நிறையும் இல்லாத! குற்றம் குறை இல்லாத! நாமரூப வினைக் குறிகள், எதுவும் இல்லாத! மறைப்பும்! தெரிதலும் இல்லாத! **மனமும்!** அம்மையை மயக்கமும் இல்லாத! எமது! உமது! இல்லாத! **பேதாதிபேதம்** எதுவும் இல்லாத! அறிவே! **பேரறிவான** நிலையால்! அமைந்த, எம் பரமானந்த நிலையை, எப்படி புகல்வோம்?

125 ஸத்குரு நாதா! ஸத்திய சொரூபா! ஹே பிரபோ! இதுவரை, இந்த **ஏழை** பெற்ற, ஸ்வய அனுபவத்தை தாங்கள் கிருபையால், சொன்னோம். இந்த நிலைக்கு, எம்மை ஆளாக்கிய, நிலைக்கு தாங்களுக்கு, என்ன கைமாறு, செய்ய முடியும்? **உடல்! பொருள்! ஆவி** (உயிர்) உமக்கு, எம் மனதால், உவந்து கொடுத்தோம்! அவைகள், நாமரூபம் இல்லை! இல்லை! இல்லை! என்ற நிலையில்,



பஸ்பம் ஆக்கிவிட்டாய். நாமரூபம் எனையும்
இல்லாத நிலையால்! ஜீவ போர்வை நீங்கிய நிலையால்!
யாம் / ஆத்மாவே! ஆகவே இன்று,
எல்லாம் நீயே / என்றும்; எல்லாம் ஒன்றே!
என்றும் சர்வார்ப்பணமும் & பிரம்மார்ப்பணமும்!
இணைந்த நிலையால், துவைதபாவனையால் பரமாத்
மாவாகிய / உம்மிடம், எம் ஆத்மாவை
அர்ப்பணம் செய்தோம்! மறுவினாடியே
எம்மையும் (ஆத்மாவையும்) உம்மோடு (பரமாத்மாவோடு)
ஒன்றாக்கிக் கொண்டாயே!
(126) இனி கைமாறு செய்வதற்கு, யார் இருக்கிறார்கள்?
" " " ஏது இருக்கிறது?
இருமை இருந்தால் அல்லவோ, யாம் உண்டு? நீயும் உண்டு?
ஒருமையாய், யானும் இல்லை! நீயும் இல்லையே ஐயா?

(87)



யாம் உயிர்ப்பு புதுமையாக இருந்தபோது,
சமுத்திரமாகிய உன்னைக்கண்டு கண்டு,
பெருமை உண்டாகவில்லை! சிறுமையே உண்டானது!!
நீ வெறும் ஜலம் தானே? ஓர் நீர்ப்பரப்பு தானே? சும்மா
சள, சள, சள, சள, சள, சள, என்று, அலை அடித்து
வெறுமனே (சும்மாதானே) இருக்கிறாய் என்றும்,
எம் நிலையை அஹங்காரமமகாரத்
தால்! உயர்த்திக் கொண்டு தன்மையால்; எம்
அஹங்கார மமதை விறாட் சொருபத்தை எடுத்து,
யாம் பரந்து, விரிந்து, அகன்று, நெடி
துயர்ந்து வண்ணமாக, நின்று கொண்டு, உன்னை
புறம்பவாறு, நிந்தித்து, ஏளனம் செய்தோம் எங்களுக்கு
கால் அளவு நீ இருக்க மாட்டாயே? உனக்கென்ன பெருமை?
~~கொக்கரித்து,~~
என கொக்கரித்து, கர்வம் கொண்டோம் ??????



(88)

உங்கள் ஜக, ஜீவ நேசத்தின் நாம

ரூபங்கள்! எத்தனை எத்தனை? எத்தனை கோடானு

கோடி? உருவம்! அரூபம்! ரகசியம்! எங்களை மதிக்க உனக்கு

இரண் ஏது? நாங்கள் மதித்தால், நீ என்ன ஆவாய்? என

மனக் கணக்கு போட்டோம்? இப்போது??????

உன் மீது, கை! வைத்து பார்க்கத்தான் நம்பிக்கை

வைத்த பாருகோன்! யாம் என்ன ஆனோம், என்றே

புரியவில்லையே பிரபோ! தேவா பிரபோ! ஜோதி யா நிதி!

யாம் இன்றேல் நீ உண்டு!

நாமரூபம் இல்லாமல் அது உண்டு ஆனால்!

நீ இன்றி யாம் நாமரூபம் இல்லை!

என்பதை உணர்ந்து கொண்டோம் பிரபோ! இப்போது

யாமே நீயாய்! நீயே யாமாய்! ஒன்றாக கலந்து விட்டோம் பிரபோ!



127 ஆகவே எம்பெருமானே! நைமாறு அளிப்பவனும்

யாரும் இல்லை! கைமாறு கொடுக்கப்படுவதும்,

நாமரூபமும் பொருளும், இல்லையென்பதே ஸத்தியம்.

அப்படியே இருப்பதென, பொய்களைச் சொன்னாலும்?

யாம் எங்கிருந்து கொண்டு, எதைக் கொடுப்பது?

நீ எங்கிருந்து கொண்டு, எதை வாங்கி என்ன செய்வாய்??

இப்படி பரு கேவலமாகி விட்டோமே பிரபோ?

இனி நீ எதை? எவர்க்கு? உபதேசம் செய்ய போகிறாய்?

யாரெதற்காக? என்ன பாடம்? கேட்கப் போகிறீர்கள்??


ஆனால் இது ஆச்சரியமாகவோ? அபூர்வமாகவோ?

தோன்றவில்லை பிரபோ! ஐயமே இதுதான்!!!

128 ஸத்குரு! என்ற நாமரூபமாய் நீயும் இல்லை.

ஸச்சீடன்! " " " யாரும் இல்லை

முக்குணக்கால் தோன்றிய, பேதப் பிரிவுகளும் இல்லை!




(90)

மூலமாயை என்ற **யோகமாயாவும்** இல்லை.
அது தோற்றுவிக்கும்தாக சொல்லும், அண்டபிண்ட, பிரம்மாண்டங்களும், சூரிய சந்திரனாதி கோடானுகோடி கோள்களும் நாமரூபத் தோற்றமில்லை! அந்நாமம்,

என்றோ கவனக்குறைவு என்ற, அறியாமை என்ற, **மூலமாயா** இல்லை! ஆகவே, கலிதோஷத்தின் நாமரூபமாக சம்பந்தமான, ஜக ஜீவ, தோற்றங்களும் இல்லை! இவைகள், உண்மையற்றதான கதை கதையாகவும் பேசும், தர்க்கங்களும், நாமரூபமாக இல்லை!

**கேவல கைவல்ய** பரப்பிரம்மம் ஒன்றே உள்ளது. அதுவே யானாகவும் யானே அதுவாகவும் இருக்கிறேன். இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! அதுவே யாம்!

(129) இன்று, யாம் வணங்கலாம் என்றால், இங்கு **இருமை** இல்லை! **ஒருமையில்!** வணங்குபவரும்! வணக்கம் பெறுபவரும்! இல்லவே இல்லை. ஆகவே வணங்க இயலவில்லை. அதையும் மீறி யாம் உன்னை வணங்கினால், எம்மை **அஞ்ஞானி** என்று சொல்வாய்?



உன்னை வணங்க வேண்டாம்! எம்மையே யாம் வணங்குவோம், என முயற்சி செய்தால், எந்த பயனும்!
எந்த பலனும் இல்லாமையால், வணங்குதல் என்ற, சொல்லுக்கே இடம் இல்லை போ?


# நிர்குண வைராக்யம்!

(132) ஹே ஸத்குருதேவா! ஸத்தியசொரூபா!
சாந்தஸ்வரூபா! நிர்குணாநந்த ஸ்வரூபா! உம்
கருணையால், யாம் ஜீவன் முக்தி நிலை, பெற்றுவிட்டோம்.

அதைப்படி, உணர்கிறோம் என்றால்:- நாமரூப!
ஜக! ஜீவஸ்வரூபங்கள்! குண கோடிகள்,
எம்மைபாதிக்கவில்லை. காரணம்:- திட்டமிட்ட
காரியங்கள் மன பொம்மைகள், வினை
என்ற ஓர் பெயரைச் சொல்லி, ஆடிக்களிக்கின்றன.
அதனால் வினையை ஆட்டிக் கழிக்கின்றன!

இதை மனம்! என பேசப்படுகிறது. யாம் ஜீவன்
முக்தி ஆகிவிட்டாலும், வினை உடலுக்கு இன்னமும்,
கணக்கு முடியவில்லை போலும்? அந்த வினை முடியும்
மட்டும்;

(௯௨)



**மனம்** இல்லாத் தன்மையால் அதாவது இத்தூலம் வினை முடிந்து, விழுந்து மறைவதை, **விதேக முக்தி** என பேசப்படுகிறது.


மனம் அழிந்து, மறைந்தாலதை, ஜீவன் முக்தி என்றும், வினை முடிந்து/தூலம் முடிந்தால்/ திரும்பவும் இத்தூலம், எழாநிலையை, விதேக முக்தி என்றும் சொல்வர்.

அதுகாலபரியந்தம், இத்தூலம் **பிணம்போல** சஞ்சாரம் செய்ய வேண்டும். பிணம் சஞ்சாரம் செய்யுமா என கேட்கத்தோணும்? "உணர்ச்சியற்ற கட்டையாக" **தூலம்** சஞ்சாரம் செய்வதையே

ஜீவன் முக்தனின்/ விதேக முக்தி/ சஞ்சாரம் என்று, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

அதுசமயம்:- பிராப்தாதீன, சஞ்சார காலங்களில், கிடைக்கும் உணவு/ உடை/ இருப்பிடம்/ இவைகள்/ இவன் **விதிப்படி** அமையும்.

ஞானிக்கு பிராப்தம் முடிந்து, மேலும் சிலகாலம் சஞ்சாரம் செய்ய வேண்டிய, நிலை வந்தால், அங்கு வினை இல்லாத்தன்மையால்.



93

இறை கருணையாக! அதாவதிற்கு,
உணவு! உடை! இருப்பிடம்! தேவையான
அளவு வசதிகளும் பெறும்.
அது சமயம் :- துவைத பிரபஞ்சமானது! அதாவது
பக்குவம் அடையாத, ஜீவர்களுடைய விருப்ப
மாக அவஸ்யம் காக்கும்.
காரணம் :- மனப்பரிக்ஷையாகவும் இருக்கலாம்!
அனுபவமாகவும் இருக்கலாம்! ஆகவேதான் இங்கு
துவைதத்தின் ஆபாசங்கள்!
என ஓர் வார்த்தையை போட்டோர்.
துவைதத்தின் ஆபாசங்கள் :- நாமரூப, பொய்த்தோற்ற
நீங்கள் மெய்யாக தோற்றி, மனதை மயக்கும்.
இது மனதிற்கு, ஓர் பரிக்ஷையாகும். இந்த நிலையிலும்,
இயல்பான போராட்டத்தை! இல்லையென தள்ளி!
பரம் பரமானந்தமாகவே புகிம்போம்!




94

133

ஜீவன்முக்தர்களுக்கும், அறிவுடையவர் போற்றவும், பாமரர் தூற்றவும், இது இயல்பாக நடைபெறும். அதுசமயம், **அகம்பிரம்மம்** நிச்சயத்தால், அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம், ஜெகம், பரமும், ஜீவர்களும், எந்த நாமரூபத்துடனும், இல்லை என்ற நிச்சயத்தால், போற்றுதலும், தூற்றுதலும், **புஷ்பாஞ்சலி**யாக ஏற்றுக்கொண்டு, பிணம் போல் சஞ்சாரம் செய்து பிரம்மானந்தமாக இருப்போம்.

134 ஸ்ரீ ஸத்குருவார்யா! ஜீவன் முக்தி நிலை பெற்று விட்டாலும், இக்கலிகோரமானது **ஆகாரம்** ஜீவமாக, விஷக்கிருமி போல் பரவுவதால்,



அவ்விஷக்கிருமி நாகினியாகிய! பின்பு கூறிய,
அகம் பிரம்ம பாவனையை, தாவம் விழும் வரை,
விதேக முக்தி அடையும் வரை! ஸமாதி கொடாமல்,
இருப்போம் என, பிரமாணமாகச் சொல்கிறோம்.
அந்த நிலையால், ஆதி முடிவு ஒன்றும் இல்லாத,
அகண்டான்மாவில் அமர்ந்த
வண்ணம், தாவத்தை முடிப்போம்.

## நூலின் பெருமை

130 இந்த ஸிவயஞானுபவ
நூலே ஸத்குரு ஆகும்!
ஸத்குருவே! ஸிவயஞானுபவ நூலாக இருப்பதாலும்,
நூலின் பெருமையையும்! இந்த நூலின்,
ஞானத்தின் பெருமையையும்! இதை உணர்ந்த



உ

(௯௬)

ஞானியின் பெருமையையும்!

இந்த ஞானி ஸாது ஆன பெருமையையும்!

அவன் ஆத்ம ஸாந்தியின், பெருமையையும்!

இதன் பரப்பிரம்ம சுக பெருமையையும்!

இதை உணர்ந்த, ஏம்

சுகமஹிமையையும்!

எவராலும் வரி வடிவிலேவா! வாக்கு வடிவிலேவா!
சொல்லவும்! உணர்க்கவும் முடியாது!

(131) ஹே ஸத்குருதேவா! நாமரூப உலகின் நிலையில்
தற்காலிக தாய் தந்தையராக இருப்ப
வர்கள் தெய்வீக நிலையில், தெய்வம் போன்றவர்களாகும்.
பரமார்த்தத்தை, உணர்ந்த நிலையில், அவர்கள்
வாடகைக்கு வந்த அம்மா! அப்பாவாகும்.
→ ஆரம்பம்.



அதிசய பந்து:- (97)
ரத்த சம்பந்
தத்தால் இணைந்த
உறவு சுற்றம் எல்லாம்
வினை சம்பந்தத்தால்
இன்ப துன்பமும்! அத
னால் ஜனன மரணமும்!
பிறவியை உண்டு பண்ணு
பவர்கள் ஆகும். சர்வார்ப்பணத்தால்
உனக்கு அனுகூலமானவர்கள் தொடரும்.

முடிவில் **மண்** பதுமைகளாகும். இந்த அன்னையும்
தந்தையும், கோடானு கோடி, ஜன்மா தருவார்
களேயன்றி, ஜன்மா நீக்க மாட்டார்கள். இதைத்தான்,
ஸ்ரீமஹான்கள் பாடும் போது, தம் அனுபவ நிலையில்!
அன்னை எத்தனை எத்தனை அன்னையோ?
தந்தை எத்தனை எத்தனை தந்தையோ? என்றார்கள்.
**ஜன்மம்** எத்தனை எத்தனை ஜன்மமோ?
என அலுத்து, சலித்துக் கொண்டார்கள்.
**அம்மா, அப்பா** இருவரும், உடல் கொடுப்பார்!
**உறவு சுற்றம்** அனைத்துமே, வினைய " !
ஆகவே இவர்கள் எல்லாம், ஜன்ம, சத்ருவே, ஆவர்!
ஆதி அந்தம் இல்லாத, ஸத்குரு ஒருவரே **அகண்ட**
பரஞானத்தை, தம் அருளால் வழங்கிடு



(98)

மட்டும் உன்னோடு சேர்ந்து ஆன்ம உறவுக்கு ஒத்து வரும். ஏனையோர் அவசியம் நீக்கப்படுவர். அது சமயம் ஆன்ம இறைப் பின் நிமித்தமும், உனக்கு உபகார நிமித்தமாகவும் ஸ்ரீபகவானே! உனக்கு நட்பான நிலையில் இணைபவன் அவர்களால் வினையும் சொந்தம் தொடரும்.

எனது என சொந்தம் கொண்டாடிய, அனுபவ பந்தம் எல்லாம், துப்பறவே நன்கு துடைத்து எம்மை காத்தவராகும்.

(135) ஆகவே ஸத்குருநாதரே! ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! ஆபத்தில் உதவும் நண்பன்! ஐஸ்வரத்தின் (மோக்ஷத்தின்) துணையும்! அதிசயிக்கத் தக்க சொந்த, பந்த, உறவும்! எல்லாம் நீயே! எல்லாம் நீயே! எல்லாம் நீயே! என சந்திர ஒளியைப் போன்று சீதாத்தை கருணையை அடைந்து, ஸின்மாத்ர கியான மறைய் அகண்டானந்த சமுத்திரத்தில் கரைந்து, கலந்து, மயமாகி விட்டோம்.

முற்றும்



(99)

உ

தாவமதை,
உபாஸனையும்
கேவலமல் சாதகர்க்கு
உகந்ததாக அமையும்.
அவர்கள் தெய்வீகம்
ஆனவர்களானாலும் அவர்
களையே ஸ்ரீமஹான்கள்
தம் அநுபவத்தில் சொல்லும்
போது அதிசய பந்த என்பார்கள்.
முடிந்ததும்

(108) அத்வைத சுவையின் மஹிமை!

பரம்பொருள் ஸ்ரீபகவான் நிலையில் ஓர் சர்க்கரை யாகவும்!

நாம் ஓர், எறும்பாகவோ! தேனீயாகவோ! நான்

இருந்து த்வைத நிலையில்! (ஸ்ரீபகவான்! பக்தன்!!)

தான் எல்வோரும், சுவைக்க விரும்புகிறார்கள்.

ஸ்ரீ பரம்பொருள்:— நாமரூபம் குணம் கடந்த நிலையில்.


சர்க்கரை பாணி யாகவோ! தேன் ஆகவோ!

திராவக நிலை!

ஸ்ரீபகவான்:— நாமரூப குணம் (ஏகுணம்) உள்ள ஓர்,
சர்க்கரையாகவோ! மிட்டாய் ஆகவோ! கருக்கல் ஓர்

கடவஸ்து நிலை!





(100)

**அதை**

சர்க்கரையாக
பார்த்தால்? அது
ஸ்ரீபகவானே!!!

**அதை**

பாணியாக உணர்ந்தால்
அது பரம் பொருளே!

அங்கு நாமரூபம் உண்டு. இங்கு நாமமட்டும் உண்டு.
,, ஜன்மா உண்டு. ,, ஜன்மா இல்லை.

இதன் ரகஸியம் என்னவென்றால்?

சர்க்கரையாகவோ மிட்டாய் ஆகவோ! ஸ்ரீபரம் பொருளாகிய, ஸ்ரீபகவான் இருந்து! நாம் ஓர் பக்தன் என்ற நிலையில் எறும்பாகவோ! தேனீயாகவோ! இருந்தால் **சுவையும்** உண்டு! **சுவைப்பதும்** உண்டு!

**நாமே** சர்க்கரையாகவோ! மிட்டாயாகவோ! இருந்துவிட்டால், சுவைப்பவன் இல்லாமல், **சுவையின்** பெருமை தெரியாதே என்று

இதன் அதிரகஸ்யமான, உண்மையை உணராமல், நம் கவனக்குறைவால் சொல்கின்றனர்.

சர்க்கரையையோ! மிட்டாயையோ! எறும்பாகவோ! தேனீயாகவோ!

**நாமரூபத்துடன்**

சுவைக்கலாம் - - - - - - - - - - ???



கோரமான கலி (101)
யுகத்தில்! கோர
துணிவுகளால் தான்;
சிக்கிக் கொள்ளாமல் முழு
மையாக சத்வ
குண சம்பன்னை!
எந்த ஜீவனும் இருக்க
முடியாது. இருக்க இயலாது.
அதனால் ஜன்மா மாறும். இல்லை உன் குணமே தொடரும்!
ஸ்ரீபகவானிடம் கிட்டச் செல்லும்.

எறும்பாகவும்! தேனீயாகவும் தான்! நாமரூபம்!
திருஷ்டபம்
↑ பெறுவாய் என்பதற்கு, என்ன உதாரணம்???
நாமரூப ஜகத் மயக்கம்
↑ உன் மன எழுச்சியால் வேறு நாமரூபம் தாங்கும்
நீ ஒரு எறும்பானால், சர்க்கரையும்! மிட்டாயையும்!
இழுக்க நேரிடுமே! அப்போது என்ன செய்வாய்?
ஆகவே?
நீ! எறும்பாகவோ! தேனீயாகவோ! (ஓர் பக்தனை)
இரு. ஆனல் ஸ்ரீபரம்பொருளாகிய ஸ்ரீபகவானை!
தேனாகவோ? சர்க்கரைப் பாணியாகவோ? ஓர்
திராவகமாக பாவனை பண்ணு!
எந்த பாவம் தப்பவது! என்ற நியதி இல்லை
உன்னால் முடியும்! உன்னால் முடியாதது இந்தமை
புலம்பாது!



(102)

உ

உன் குறையைக் கீழ் நோக்கி தோழு குறைகளுக்கு இருக்கும் பட்டாவ் இது உன் மனதின் திறமே! இது ஸ்ரீபகவானின் திறம் இவ்வில் என்பதே ஸத்தியம். அதை ஞானமானதும் என்பது ஸ்ரீ மஹான்களின் அனுபவமாக இருக்கிறது. ஆகவே கவனம் தேவை முற்றும்.

ஸ்ரீபரம் பொருளாகிய, ஸ்ரீ பகவானை திருவகம் என ஆக்கும் போது, அந்த **நாமா** மட்டுமே உண்டு.

வேறு எந்த **ரூபமும்** இருக்க முடியாது!

இருக்க இயலாது! இந்நிலையில், நீ ஸ்ரீபரம் பொருள் என்ற, ஸ்ரீ பகவானை, சுவைக்கும் போது ??????

அதுவே நாம்! நாமே அது! என்ற, அகண்டான்ம பாவனையில், சுவைக்கும் பிரம்மான்ம போதை!

**மயக்கத்தில்** ~~உன்பிராணின் மட்டாகும்;~~ உள்ளே விழுந்தாலும்;

**அதன்** (அகாவது) **போனா** ~~ஆகாரம்.~~ மெய்மாகிவிடுவாய். அந்த ஞானமாகிவிடு.

பிராம்கோதிஸ்மாகதால சஞ்சாரம் செய்தாலும்;

அந்த மயக்க **போதையில்**! உன் சாவம், எங்கு விழுந்து நாசமானாலும், அம்மெய் உனக்கு ஞானமாகிவிடு!




உன் மனதிலேதான் (103)
ஸ்ரீ பகவானை ஏற்க
முடியுமே தவிர
ஸ்ரீ பகவான் உன்னை நேராக
ஏற்கமாட்டான். ஏற்கவே
முடியாது! இயலாது! காரணம்
அவனுக்கு மனமே இல்லை!
எந்த சொந்த
ரூபமும் இல்லை. நீ உன் மனதால்
எண்ணும் வடிவத்துடன்தான்
அதுவே, அவனாக வருகிறதே யன்றி
அவனுக்கு தனியே இருப்பு இல்லை என்பதே ஸத்தியம்

ஜென்மாவை! பிறவி இல்லாமல் முடிக்க,
இந்த அத்வைதம் ஒன்றே!
சிறந்த வழியும்! ஒரே வழியும் ஆகும்!
வேறு எந்த வழியும், எங்கும் இல்லை யென்பதே!
நான்கு யுகங்களிலும், வாழ்ந்த ஆத்ம
ஞானிகளின் அநுபவமும் அநுபவ வாக்கும் ஆகும்!

சுவையும்! சுவைப்பவனும்! தனித்தனியே
துவைதமாக இல்லையே
என்ற, ஏகோ காரணத்தாலும்! அந்த அத்வைதானுபவத்தை
சொல்பவனும்! கேட்பவனும்! தனித்தனியே இல்லாத
தன்மையாலும்! அத்வைதம் அது எதால் ஆனது? அது
நாம் என ஆனால் நாம் என்று ஆவோம்?

நாமே அவையாக இருப்பதால், என்று





(104)

ஸ்ரீபகவானைகயும், அவன் பக்தனைகயும்! திரும்ப திரும்ப வருவோம். நாம் அவனாகவோ! பின் நாம் அதுவாகவோ!

ஆக வேண்டாம்!

பிரயோஜனம்?? என்ற மாயா மயை பிராந்தி மயக்கத்தால், இந்த சுத்த அத்வைதத்தை! விரும்பும் ஸத் ஆன மாணவனும் இல்லை! ஆனால் ஸத்குரு உண்டு! இருந்தும், ஒரு பிரயோஜனமில்லை!

இப்படி குருவும் சிஷ்யனும், இல்லாத நிலையில் இந்த அத்வைதநால், எப்படி பிரகாசிக்கும்???

ஆகவே பிரகாசிக்கவில்லை. அது தேவையுமில்லை!

ஸ்ரீஸத்குருவும்! ஸ்ரீ சிஷ்ய மஹாத்மாவும்! ஸ்ரீ பகவானும்! இணைந்து, சேர்ந்து, உருவாக்கிய நூலாகிய, ஸ்ரீமத்ரியுகீதையின் மறு நாமாவான, ஸ்வய ஞானஜைபல நூல்



எவர்க்கு பாக்கியமாகிறது என்றால்?


பூர்வ புண்ணியம் **தர்மமாக** மாறிய தன்மையாலும்; அவர்களுடைய **உபாசனா** மூர்த்தியின் பரம கிருபையாலும்; **ஸத்குரு** அருள் ஆசியை பெற்றதனாலும்; அவர்கள் **சுத்தா** வைராக்கியத்தினாலும்; ஏக்கம்! உருக்கம்! பக்குவம்! இவைகளை, பெற்ற தன்மையினால்! **ஸமர்ணகயில்**! கிடைத்திருக்கிறதோ!!! அவர்கள் பாக்கியவான்களே! அவர்கள் ஜீவன் முக்தர் ஆவார்! என கூறவில்லை.

**அவர் ஜீவன் முக்தரே!!!**

இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

பர குரு ஸ்துதி!

**ஆதிமத்யாந்த ரஹிதமாயும்! ஜோதிநித்யானந்தஸ்வரூபமே!**



அமைந்த நிலையில், **நாமரூபம்** அற்ற நிலையில், பரப்பிரம்மமாயும், **மனவாக்குக்கு** எட்டாத பரப்பிரம்மமாயும், **காலம், தேசம், வர்த்தமானமற்ற** நிலையில் பரப்பிரம்மமாயும், **எண்ணம், சொல், செயலற்ற**, பரப்பிரம்மமாயும், சொல் செயலற்ற ஒன்றை, சொல்லால், ஓர் பொய்யான விளக்கம் பெறுவதான, **பரமே மனம், மனமே பரம்**, என்ற நிலையில், அதுவே நாம், நாமே அது, அதுவே நீங்கள், நீங்களே அது, **அது, யாம், நீங்கள், ஒன்றே**, என்ற பராஸ்துதியுடன் இவ் விதழ், நிறைவு பெறுகிறது.

**பாபா.**



அதை விளக்கும் (107)
நடையில், அழகும்!
மாயாவும்! ஓம்
பெருமையும், அன்பர்களுக்
காகவே; ஓர் நாமா
வைமாட்டுமே தாங்கி; இருவர்
என்றதுவைத பான்மையில்! அம்பிகைக்கு ஈசன்!
தொடரும்.

**140 வேறு!**

**ஸ்ரீ குரு நாதர்** ஸத்திய வாக்கின்
படி, சிரவண, மனனம், செய்து! அதை எம்
**நிதித்யாஸம்** (ஸ்வய அநுபவம்) செய்ததால்
**இறை, பார்!** கருணையை பெற்று, **ஜீவன்**
**முக்தியை!** பெற ஏதுவான, இந்த நூலின்
மகிமையை, சொல்லி, இதை ஆர்த்தி செய்ய,
முழுமைதரும் பொருளான, **பரப்பிரம்மானந்**
வடிவமான, பரசொரூபமான, மகேசனும், அவன்
நிழலாகிய, யோகமாயாவும், இணைந்த நிலையில்,
**ஸம் ஐக்கியம்!** வாக்கிய விளக்கத்தை
நீக்க! அன்பர்களுக்கே, சொல்லும் நிமித்தமாக!

108



என ஓர் ஒலி
வடிவம், எம்
ஸ்ரீ கொடுத்தாரே யன்றோ,
அங்கு எந்த நாம ரூபமும்,
இல்லை யென்பதே ஸத்தியம்!
ஆகவே தான் ஞானம்
என குறித்தோமே, பரநிலையில்
சொரூபமே!
அகண்ட
என்றோர் - இவ் ஏகசமேத அம்பாளோ! இல்லை
யென்பதே, ஸத்தியம் முடிந்தது!

ஓர் நாமமை மட்டும்!
அதாவது அம்பிகேசன்! அதாவது
மாயாமஹேசன் என்ற, ஒலி
வடிவோ! வரி வடிவோ! பெறும் நிலையாவாத,
அந்த காயாத்தபரம்பொருள்!
அந்த பிரம்மானந்தத்தை, ஆனந்த நர்த்தனம் என்று,
சொல்லும் நிலையில், போற்றி புகழ்ந்து சொல்லி,
பர சொரூபமாகவும்! பர கருணையாகவும்! பாவன
நிலையில் அகண்டானந்த
நிலையில், இதை நிறைவு செய்கிறோம்.
ஸ்ரீ மஹாத்மா!!!!!!

பாபா.

எல்லாம் ஒன்றே! அதுவே! அதுவாமே! யாமே அது!
இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்.



உ

# அத்வைதத்தின் சிறப்பை

எம் **அழகனின்** ஸித்தருடைய,

பாடலுடன் நிறைவு செய்கிறேன்!

உடல்என்ற கொல்லியிலே,

அப்பாடலாவது :- --------- **சாமி**

அகல பாத்தி கட்டி; வெங்காய நாற்று நட்டு; வெகுநாளாய் காத்திருந்தோம்???

வெங்காயம் தின்னுமவே **மேஸ்தோ**


தின்றவ்வ வோ! சாகாமல் சாகிறண்டீ! **டீ**!

(உள்ளி) பொருள்!

வெங்காயம் என்பது, ஓர் நாமரூபமுள்ள பொருளே.

எவரும் அதைக்கண்டவுடன், இது வெங்காயம் தான் எனக்கூறுவர்! கூற முடியும்!

அதை உரித்து! உரித்து! பார்த்தால், வெறும் தோல் தான்! தோற்றம்! வெங்காயம் என ஒன்றை,




கண்டோமே! அது என்னவாயிற்று? என பார்த்தால் வெங்காயம் தோற்றவில்லை! தோல் தான் தோற்றுகிறது.

இதுவே, மாற்றத்தால் வரும் ஏமாற்றமே!


இதுவே, இன்று நீ காணும், நாம ரூப ஜகஜீவ, உறவு, சுற்றம், நட்பு, மற்றும் அனைத்து பொருட்களும், மேலே கூறிய, அனைத்து நாமரூப ஷிகளையும், இது என்ன? இது என்ன? இது என்ன? இது என்ன? என **அறிவு** ஊன்றி, விசாரணை செய்தால், இது இல்லை! இது இல்லை! இது இல்லை! இது இல்லை! என்று நிலையில், எல்லாம் **மண்** என்பதே சத்தியம் ஆகும்.

நாம ரூப, ஜகஜீவ, மயக்கத்தில், உன் மனம் மயங்கி சிக்கி இருப்பதால், அவை சத்தியமாகவும்! நித்தியமாகவும்! சாஸ்வதமாகவும்! அதனால், ஏதோ ஓர், **சுகம்அல்ல** இன்பம், அனுபவிப்பதாக, தோற்ற மயக்கமாய், தோற்றிக் கொண்டிருக்கிறது.



இதைத்தான் கிராமிய பழமொழியாக, சொல்லும்
போது:- மண்ணுக்குள்ளே மயிராண்டி!
அதை உரிக்க! உரிக்க! நோவாண்டி! என்பார்கள்.

இப்பாடலில், சாண் அகல பாத்திகட்டி என்றால்,
சாண் அகல இதயத்தையும்! அதில் உள்ள மனதையும்!
மனதில் தோன்றும், **எண்ணங்களை**யும்
குறிப்பிடுகிறார். அந்த எண்ணத்தால், மனக்கண்களால்
காணும்! கணவன்! மனைவி! மக்கள்! அம்மா! அப்பா! மாமி
அண்ணன்! தம்பி! அக்கா! தங்கை! மாமன்! மைத்
துனன்! தாத்தா! பாட்டி! பாத்திர, பண்ட, பாண்ட,
பொருள்கள்! பணம்! இவைகளின், ஒட்டுமொத்த!
வரவு செலவு! போக்குவரவு! கொடுக்கல் வாங்கல்!
எல்லாமே **பண்டப்பரிவர்த்தனம்**
எல்லாமே, வெங்காயம் போன்றதாகும்.



பாசத்தை

விளக்கிறேன், விகாரமும், அதன் விவகாரமும்தான்!

விளக்காமல், உணர்ந்தால் எல்லாம் மண்ணே!

மண்ணாக, உணர்ந்த நிலையில், விகாரமும் இல்லை,

அதன் விவகாரமும் இல்லை! அங்கு மனதின் வேலை இல்லை.

# இலவு காத்த கிளியாரே


எனவும், ஒரு பழமொழி சொல்வதுண்டு. ம்

இலவுமரம்:- இதில், பருவகாலங்களில் காய் (போன்று) கொத்து கொத்தாய், தொங்கும். இக்காய் முற்றி ஆகும்போது வெடிக்கும்! அப்படி வெடிக்கையில்,

**இலவம் பஞ்சு** காற்றில் பறக்கும்!

(இது காய் தானே, தவிர பழம் ஆகாது)

கிளியின் கூட்டம், இம்மரத்தை பார்க்குமாம். காய்கள் கொத்து கொத்தாக, தொங்கும் வகை கண்டு. இவை எப்படியும் பழம் ஆகும் என்றும். அப்பழங்களை, கொத்தி தின்ன வேண்டும் என்றும், **பலநாட்கள்!** காத்து இருக்குமாம். அது பழுக்காத நிலை கண்டு, சரித்தை,



113

கொத்தித்தான் சாப்பிடுவோமே என்று முதிர்ந்த காயை கொத்துமாம்!
பஞ்சு பறக்குமாம்!
கிளியானது போகுமாம்!
இந்த கதை தானோ! உங்கள் கதையும்???
இந்த இலவங்காய், ஓர் மாங்காய் பருமனிருக்கும்.
பார்ப்பதற்கு, வெகு அழகாய் இருக்கும்.
அழகே ஆபத்து! என்பதை அறிகின்றீர்கள் உணர்வதில்லை!
அவைகளுக்கு உணர்த்துபவரும் இல்லை! ஆனால்?
உங்கள் அனைவருக்கும், உணர்த்துபவர், உங்கள்
உள்ளும் புறமும் இருக்கின்றாரே! அவரை
மறந்து விடுவீர்களா? மறக்க மாட்
டீர்கள் என்றே எண்ணுகிறோம்!!!!!!!!!
உங்களை நம்புகிறோம்!!!!!!



உ

அழகே ஆபத்து! ஆகும்.

அழகான மனைவி! கணவன்! குழந்தை! பொன்! பொருள்! ஆடம்பரம்! அணிமணிகள்! பாத்திர பண்ட பதார்த்தம்! வீடு! மாடு! கன்று! தோப்பு! புஞ்சை! நஞ்சை! இன்னும் கோடானு கோடி!!

இவை அனைத்தும் அழகான நாமரூப மயக்கம் தானே?

இவைகளை எண்ணி! உங்களை மறந்து விடாதீர்????

வெங்காயம் போன்று, ஒன்றுமில்லாமல், வெறும் தோலின் கவர்ச்சி மயக்கமா? சிந்திப்பீர்!

இவ்வங்காயமும் என நம்பி! நம்பி! நம்பி!
நொந்து! காத்து! காத்து! இருந்த காலங்கள் போதும்?
எல்லாம் மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய
மண்ணே! அனைத்து நாம ரூபங்களும் மண்ணாகிய பரத்துக்கு
அன்னியமாயில்லை! நாம் அப்பரத்திற்கு அன்னியமாய்
இல்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்! மயங்கியது
போதும். இருப்பது ஒன்றே! நடப்பது நவமே!
எல்லாம் ஒன்றே! அது சிவமே!


பாபா.

அதுவே யாம்! யாமே அது! அதுவே நீங்கள்! இது சத்தியம்.



# உ

சென்ற முறை, **பொதிகையடி** நம் ஸ்ரீ மெய்யன்பர்களுடன், சென்ற சமயம்; **குறுமுனிவர்** (**3** அடி உயரம்) எனச்சொல்லும், ஸ்ரீ மஹா லக்ஷ்மா! **அகஸ்தியர் பிரான்!** சந்திக்கும், வாய்ப்பு கிடைத்தது. அச்சமயம் இதன் → **முன்** தோற்றத்தில்; இதே ஸ்வய ஞானுபவ நூல், அவரிடம் காட்டி, பல விளக்கம் பெற்றதுண்டு. அது பற்றி இம்முறையும், அவர் ஓர் சிறிய விளக்கம் தந்தார். அவர் விளக்கம் தந்த பாடல்கள் **6&4** ஆகும்! சென்ற முறை இதே பாடல், வரிசைமாறி நான்கும் ஐந்துமாக! **மாறி** அமைந்திருந்தது. ஆனால் பாடல்கள், எதுவும் மாறவில்லை! இந்த **140** (வேறுடன்) பாடல்கள் தான்! அன்றும்! இன்றும்! என்றும்! என்றென்றும்! அமையும். இது **அதன் கருணை** ஆகும்!



ஸ்ரீ மஹாத்மா! அகஸ்தியர் பிரான், தந்த பாடலும் விளக்கமும்!

4. அந்தம் இல்லாத தன்மையினால், ஆதி இல்லை.
ஆதி இல்லாத தன்மையினால், அந்தம் இல்லை.


சொந்தம் கொண்டாடாத் தன்மையினால், தோற்றம் இல்லை.

தோற்றம் எதுவும், இல்லாத தன்மையால், சொந்தம் கொண்டாடும், மனமும் இல்லை.

சொந்த பந்தம், இல்லாத தன்மையினால், ஜீவன் முக்தி என்ற நிலையும் இல்லை.


எங்கும் பரவியிருக்கும், ஜீவன் முக்தி, இல்லாத தன்மையினால், பந்தப்பட்ட மனமும் இல்லை. (ஜீவனும்)

சந்ததமும் சத்திய சொரூபமான, பரமாத்மா (பரப்பிரம்மம்) ஒன்றே சபளமற்ற வஸ்து எனவும்! அருவேநாம்! எனவும், அசையாது நிற்பாயாக!



6.

ஸ்பந்த (நாமரூப) ஜகத்! இல்லாத தன்மையால்;
விதிநாயகனும்! அவன் இயக்கமும் இல்லை.
விதியும்; திருஷ்டியும்; இல்லாத தன்மையினால்;
ஜகத்தை மாற்றிஅமைக்கும் காரியமும் இல்லை.
(ஒன்றுடன் ஒன்று) பொருந்தும் (நாமரூப) ஜகம்
இல்லாமையினால்;
மாற்றி மறைக்கும் (நாசம் செய்யும்)
காரணமும் இல்லை!
நிரந்தரமாயும்! நிஷ்காமமாயும்! நிறைவான!
பராத்மா ↑ ஒன்றே!
(பரப்பிரம்மம்)
சலனமற்ற வஸ்து எனவும், அதுவே நாம் எனவும்;
அசையாது நிற்பாயாக!
இதுவே அன்று அமைந்தபாடலாகும்!



இவ்விரு பாடல்களுக்கும், எமதய்யன் ஸ்ரீமஹாத்மா!

# அகஸ்தியர் பிரான் தந்த விளக்கம்!


# 4. அந்த ஒன்று! ஆதியும் அந்தமும்!

இவ்வாறு தானும்: இந்த நாமரூப, ஜக ஜீவ, பிரிவினையை, மாயாவும் மனமும்! இணைந்து விளையாடும், அம்மா(புரி)! விளையாட்டு என்கிறார் எம்பிரான்!

## மஹா மாயா!

தோற்றத்தை மட்டுமே, உண்டாக்கியது, அத்தோற்றத்தை, பற்பல நாமரூபமாக்கி, **எனது** என்று நிஜயில் உடைமை/உரிமையாக! சொந்தம் கொண்டாடியது, மாயா **மனம்** ஆகும். ஆகவே இந்த மாயா வானது, தோற்றத்தை, உண்டு பண்ண வில்லையானால், அத்தோற்றத்தில் நாமரூபம் உண்டு பண்ணி, அதை எனது என, சொந்தம் கொண்டாடும், மனமிருந்து வேலை இல்லை!

அம்மாயாவின் தோற்றங்கள், எவ்விதமானவையும் இன்றி, **மனதை** இம்மனை, மெய்யாக உணர்ந்தால், போதும்! நாமரூப, தோற்றம் இல்லா தொழியும். நாமரூப தோற்றம் இல்லா தொழிந்தால், அதை எனது என, **சொந்தம்** கொண்டாட, வழி இல்லா தொழியும்.



4.

நாமரூபத்தை
எனது என, சொந்தம் கொண்டாடிய தன்மையால்,
அந்த நாமரூபத்திற்கு, பந்தம்! என்ற நிலையில்,
குண தோஷம்! பின்னிவிட்டு, அப்பின்னலால்,
புண்ணிய பாபமும்! அப்புண்ணிய பாபத்தால் ஜனனமரணமும்!
உண்டாக வழியாகிறது. பந்தப்படாமல் இருந்தால்,
அதாவது, சொந்தம் கொண்டாடாமல் இருந்தால்,
அதாவது எல்லாம் மண்ணே என உணர்ந்து,
விட்டால், சொந்த, பந்த, பற்று இல்லாதொழியும்!
இம் மூன்றும் இல்லை யென்றால் முக்தியை!
நாம் ஏன் தேடவேண்டும்??? நாம் நித்தியமுக்தனே!
ஆகவே, ஜீவன் முக்தி என்பது, ஓர் சொல்விளக்கமே!
முக்தி அடைபவரும் இல்லை. முக்தியும் இல்லை!
இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என
அசைவற்றிரு!



ஓம்.


கோடானுகோடி, சூர்ய சந்திராதிகளும்!
" " , கோள்களும், மற்றும் எல்லாம்,
எந்த நாமரூபத்துடனும்!
இல்லவே இல்லை. எல்லாம் மண்ணாகிய, பரமே!
அந்த நாமரூப தோற்றம், இல்லாத தன்மையால், ஸ்ரீ
நாயகனை (ஸ்ருஷ்டி கர்த்தா) பிரம்மன்
சூட்சும நாம ரூபத்துடன் இல்லை. அதன் நிலையால்,
ஸ்வயம் ஜோதியாக பிரம்மம் ஆக இருக்கிறது.
அந்த நாமரூப தோற்றம் இல்லாத தன்மையால் அதை பாலனம்
என்ற நிலையால், மாற்றி அமைக்கும், ஹரி என்ற, ரூபமும் இல்லை.
அந்த ஹரி என்ற, அரிபானது! பரமத்தை அறிந்துணர்ந்த
நிலையில், ஸ்வயம் ஜோதியாக பிரம்மம் ஆக இருக்கிறது.
பாவனத்தை, பழையன கழிந்து புதியன வாக்கும்
நிலையில், மாற்றமும்! மறைவும்! இல்லை! ஆகவே,



பரம் என்ற மண்ணும்!
மாயா என்ற
ஜலமும்!
இணைந்த பின்
நீர்த்தன்மையினால்
அது களிமண் எனஆனது
அக்களிமண்ணின் பலபல
நாமரூபமாக இந்த மாயா
மனம் உண்டுபண்ணி அதை
எனது என சொந்தம் கொண்டாடி
விரியாமல் கொண்டிருப்பது இந்த மாயாமனமாகும்.

(121)

இங்கு சொல்லப்பட்ட, **ஹரன்** என்பது!
அறிவை அறியும், நேர்மமாக இருக்கிறது. ஹரன் என்ற ரூபத்துடன் இல்லை.
இதனை உணர்வதாவது?
நாமரூப தோற்றமும்! அத்தோற்றத்தை, எனது என, சொந்தம் கொண்டாடும் மனமும்! அச்சொந்தத்தால் வரும், பந்தமும், அப்பந்த நிவர்த்தி செய்தால்தான், மோட்சம் என்ற, ஜீவன் முக்தியும் உண்டென்ற,
**நாமரூப, குணம், குறி!** தோற்றம் எல்லாம் **மாயாவும்! மனமும்!** சேர்ந்து அடிக்கும், ஓர் கேலிக் கூத்தாகும். ஆகவே இங்கு,
மாயா என்றால், ஈசன் நிழலில் சாட்சி ஆகும்!
மனம் ,, ஜீவன் ,, காட்சி ,,!
மாயாவையும்! மனதையும்! **தோற்றத்தையும்!** அதன் **எண்ணத்தையும்**



(122)

கயிற்றில் வந்த சர்ப்பமாகவும்! கட்டையில் வந்த
கள்வனாகவும்! சிப்பியில் தோன்றிய வெள்ளியாகவும்!
மரத்தில் வந்த யானையாகவும்! கல்லில் வந்த நாய்
ஆகவும்! அதிஷ்டானத்தில், தோன்றிய ஆரோபம்
ஆகவும்! மெய்யாகவே உணர்ந்து, அதிஷ்டானத்தில்
நிலைத்து நின்று, ஆரோபத்தை இல்லையெனவே தள்ளி
விட்டால்! அந்த அதிஷ்டானமே, **மண்ணைக**
**பரமே** என்ற, ஸ்திரத்தன்மையால் உணர்ந்து,
**இருப்பது ஒன்றே**! என் தெளிந்தால்;
**மாயையால்** வந்த, ஈஸ்வராதிகளும் இல்லை!
**மனதால்** வந்த **நாமரூபஜகஜீவ**!
தோற்றங்களும், இல்லவே இல்லையென, தள்ளிவிடலாம்.
ஆகவே பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான்! ஆகிய
இம்மூவரையும், **மாயா**! எனதான்று.
நாமரூப, ஜகத் ஜீவ, தோற்றங்கள் அனைத்துமே,
**மன எண்ணம்**! எனத்தான்று.



ரூபம் என்றால் இதுகொல் (123) ஆனது. இது இன்னது செய்யும். என்ற குணபேதம் தோன்றும். அக்குண பேதத்தால் நல்வினை தீவினை என வினை தோன்றி அவ்வினையால் ஜனனமரணம் வாய்ப்பு உண்டு. தொடரும் உண்டு என ஞானிகள் சொல்வர்.

ஹயன்! ஹரி! ஹரன்! ஆகிய மூவரையும்,

**ரூபம்** இல்லை என்றும்; **நாமா** மட்டும் உண்டு என்றும்; அந்த நாமாவும், ஆன்ம சாதகர்க்கு ருக்காத,

வந்தது என்றும். அது எப்படி என்றால்?

(1) **ஹயன்:**– காலாதீத பரசொரூப, அம்ச பிரம்மமாக! **இருக்கிறது** என்ற ஒருமை மட்டும் உணர்த்துவது.

(2) **ஹரி:**– அந்தகாலாதீத, பரசொரூப பிரம்மத்தை, அறியும் அதாவது உணரும், **அறிவு** மாத்திரமாக இருக்கிறது.

(3) **ஹரன்:**– அந்தகாலாதீத, பரசொரூப பிரம்மத்தை, அறியும் அறிவு, பிரகாசிக்கும் நிலையில், **தர்மமாக** இருக்கிறது என உணர்ந்தால் போதும்.



உ

நாமம் என்றுவ் அங்கு
தோற்றம் என்ற
ரூபம் இல்லாத்
தன்மையானவ் (124)
குணம் அங் நீங்கி நிற்க
இடம் இல்லாமல் போகிறது.
அந்த நாமமும் சூட்சமம்
அதை சொல்லும் வாக்கும்
சூட்சமம்! ஆகவே அங்கு
சூட்சுமத்தில் குணதோஷம் நிலைபெறாது. ஆகவே
அது! அது என்றே ஸ்ரீமஹா ஞானிகள் சொல்வர்.
குருநாதம்.

ஆகவே ஹயன்! ஹரி! ஹரன்! ஆகிய இம் மூவரும்,
எந்த **ரூபமும்** இல்லாத! குண இயக்கம்
இல்லாத! **ஸ்வயம்ஜோதியாக**
வாக்கிய விளக்கமாக, **அது** வாகவே இருக்கின்றார்
தன்னை மட்டும் உணர்ந்தால் போதும்!

எம் ஆத்மானந்த குழந்தைகளே! இந்த விதமாக
எம் **ஸ்ரீமஹாத்மா அகஸ்தியர்!**
**பிரான்!** விளக்கம் தந்தார். அன்று பொதிகை
யடியில் நடந்த ஸ்வய ஞானானுபவ **ஞான**
**வேள்வி**யின் சமயம், இரவு சுமார், 12 மணி அளவில்,
ஸ்ரீமஹாத்மா அகஸ்தியர் பிரான்! குடி விளங்க **உ**
வெண் குழந்தைகளுடன் சில முக்கிய விஷயம், பரிமாறி
சென்றது. குறிப்பிடத்தக்கது. இங்கு தான் பக்திய
வாசகமாகிய, நம்பிக்கை தெளிவு நிலை என்பது!
பிரத்தியக்ஷ உண்மையாகிறது!
எல்லாம் ஒன்றே! அது சிவமே!
அது யாமே! யாமே அது! அது நீங்களே! இவ்வியல்!

**பாபா.**


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!